**பொலிஸ் வெகுமதி நிதியம் 2021**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை

மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் படி வருடாந்த தண்டப் பணம் பெறுவனவு வருமானம் மற்றும் கணக்காய்வினால் நேரடியாக மூன்று நீதி மன்றங்களில் இருந்து அழைக்கப்பட்டிருந்த வருடாந்த நீதி மன்ற தண்டப் பண வருமானம் இடையே ரூபா 891,502 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மூதூர் நீதி மன்றத்தின் காசோலை மற்றும் வட்டார அறிக்கைகள் இடையே வித்தியாசம் காணப்படின் நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். ஏனைய இரண்டு நீதி மன்றங்களினதும் ரூபா 429,168 இற்கான வித்தியாசம் 2022 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | இணக்கமின்மையை பரிசோதனை செய்து காரணங்களை இனங் காண வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தபால் திணைக்களத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 137,800 ற்கான மோட்டார் வாகன தண்டப்பண வருமானம் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்குக் கூற்று தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் 2021 ஆண்டின் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன தண்டப் பண வருமானத்தை சீராக்கல் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்கான வருமானத்தை இனங் கண்டு கணக்கீடு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் மதிப்பளிக்கப்படாத காசோலைகள் என இனங் காண்டிருந்த ரூபா 1,267,196 தொகை தொடர்பாக சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | மதிப்பளிக்கப்படாத காசோலைகளுக்காக பதிலாக காசோலையொன்று அனுப்பும் படி அறிவிக்கப்பட்டது. எதிர் காலத்தில் அக் காசோலைக்குப் பதிலாக காசோலை ஒன்று பெற்ற பின்னர் வங்கி இணக்கக் கூற்றில் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியை தீரக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 396 | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 541,250 தொகை பெறுதியான 57 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் இது தொடர்பாக உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச புலனாய்வுச் சேவைக்காக பொது கட்டுநிதியின் கீழ் 2021 பெப்ரவரி 17 திகதி வழங்கியிருந்த ரூபா 2,500,000 இற்கான தொகையை மிகைத்து போம்புருஎல்ல பயிற்சிப் பாடசாலை நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த பணத்தில் ரூபா 1,902,305 தொகை உட்பட ரூபா 4,402,305 தொகை வெகுமதிகள் வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரியாக கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதி எல்லையின் கீழ் செலவு மேற்கொள்வதற்கு பொலிஸ் பிரிவுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,423,128,814 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,487,969,210 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 64,840,396 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கான நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் ரூபா 296,630,794 தொகை குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழித்தலுக்காக நேரடியாக பங்கெடுத்து அந்த வைரஸ் தொற்றுக்குள்ளான அல்லது வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தல் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நலனோம்பல் வழங்குவதற்காக ரூபா 5,000 நிதி வரையறைக்குள் உலர் உணவுப் பொதிகள் வழங்குவதற்காக 37 பொலிஸ் வட்டாரங்களுக்கு ரூபா 104,288,491 தொகை செலுத்தியிருத்தல் மற்றும் அரச புலனாய்வுச் சேவையின் மூலம் பிரதேச பொலிஸ் நிலையங்களில் புலனாய்வுக் கடமைகள் மற்றும் பொலிஸ் விஷேட பிரிவில் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்காக விஷேட புலனாய்வுப் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்துவதற்காக நுவரஎலிய போமுருஎல்ல பயிற்சிப் பாடசாலையில் நிரந்தர நிர்மாண வேலைக்காக ரூபா 19,888,781 மில்லியன் தொகை செலவு செய்தல் நலனோம்பு அலுவல்களின் கீழுள்ள ரூபா 125,823,598 தொகை செலவில் உள்ளடப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 05 நீதி மன்றங்களில் இருந்து வெகுமதி நிதயத்திற்கு வழங்கப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 14,943,229 தொகைக்கான வெகுமதி நிதி நீண்ட காலம் முதல் தாமதமடைந்து காணப்படுவதுடன் அந்த தாமதம் 05 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2022 ஆண்டில் காசோலையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு பெற வேண்டிய வருமானத்தை விரைவாக சேரிக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்கள் அறிவுரை சுற்றறிக்கை இலக்கம் 149/2019 படி குடி போதையில் வாகனங்கள் ஓட்டப்படுவதனால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களை ஒழிப்பதற்காக அத்தியவசிய விடயம் ஒன்றெனை இனங் கண்டு அவ்வாறு சுற்றிவலைப்புக்கள் மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக வெகுமதி நிதி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது 11 பொலிஸ் வட்டாரங்களைச் சேர்ந்த 32 | மதுபோதையிலுள்ள சாரதிகளை கைது செய்வதற்காக எடுப்பதற்காக வெகுமதிகளை செலுத்துவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கான காரணங்களை காட்டும் படி வட்டார அலுவலகங்களிலிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்வதற்காக பிரதான கணக்காளரின் கையொப்பத்துடன் ஒவ்வொரு | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய முறையில் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக வெகுமதித் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொலிஸ் நிலையங்களில் போதையுடனான சாரதிகள் 4090 பேர் கைது செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த கைது செய்தலில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதித் தொகை ஏதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் படி மேற்கூறிய 11 பொலிஸ் வட்டாரங்களில் எஞ்சிய பொலிஸ் நிலையங்களுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களில் ஒரு பகுதியினருக்கு செலுத்துவதற்கும் மற்றொரு பகுதியினருக்கு செலுத்தாமல் இருப்பதற்கும் சுற்றறிக்கையின் மூலம் எதிர் பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றப்படுவதற்கு பாதகமாகியுள்ளது. | அலுவலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றிற்கான பதில் கிடைத்ததுடன் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | 2021 ஆண்டில் மதுபோதையிலுள்ள சாரதிகளை கைது செய்வதற்காக நேரடியாக தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி தொகை செலுத்தப்படாமல் அதற்குப் பதிலாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு மாத்திரம் ரூபா 710,000 வெகுமதித் தொகை செலுத்தப்பட்டிருந்த 16 பொலிஸ் நிலையங்கள் காணப்பட்டது. அந்த 16 பொலிஸ் நிலையங்களில் 14 இனால் மதுபோதையில் இருந்த சாரதிகள் 1,219 பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், மதுபோதையில் இருந்த சாரதிகள் ஒருவரையும் கைது செய்யாத 02 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு ரூபா 100,000 வெகுமதி வழங்கப்பட்டிருந்தது. | மதுபோதையிலுள்ள சாரதிகளை கைது செய்வதற்காக வெகுமதித் தொகை செலுத்துவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய காரணங்களை காட்டும் படி வட்டார அலுவலகங்களினால் தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக பிரதான கணக்காளரின் கையொப்பத்துடன் ஒவ்வொரு அலுவலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டது. அவற்றிற்கான பதில் கிடைத்ததுடன் அறிவிக்க நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய முறையில் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக வெகுமதித் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விஷேட வெகுமதிச் செலவு என ரூபா 100,000,000 தொகை செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செலவுகள் ரூபா 21,168,250 தொகையாக காணப்பட்டமையால் பாதீட்டு மதிப்பீட்டை விட 79 சதவீதம் குறைவாக செலவிடப்பட்டிருந்தது. | விஷேட வெகுமதிக் கொடுப்பனவு தொடர்பாக சரியான எதிர்வு கூறல் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஏற்படுகின்ற சம்பவங்கள் மீது விஷேட வெகுமதி வழங்கப்படுகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன். | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கா நடவடிக்கை எடுக்க வேண்டும். |